ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1919/80 - 2015 ජුනි මස 19 වැනි සිකුරාදා - 2015.06.19

1919/80 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், சண்முகம் சிவகுமாரன் என்னும் பதவி வகித்த தவிசாளர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. சின்னத்தம்பி மகேந்திரன் என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தனது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் டெனிசியஸ் கனியூட் அரவிந்தறாஜ் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. சின்னத்தம்பி மகேந்திரன் என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டெ. க. அர்விந்தறாஜ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2015, யூன் 17.

7 - 254